1979 மார்ச் 21]

மீண்டும் திருப்பிச் செலுத்துவதற்கு சக்தி அதற்கு உண்டா என்பதையும், எந்தெந்த டாக்ஸ் போடுவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும், எந்தெந்த வகைகளிலே வருவாயை அதிகப்படுத்த முடியும் என்பதற்கான வழிவகைகள் இருக்கின்றது என்கின்ற விவரங்களை எல்லாம் இந்த அரசு பரிசீலிக்கும்.

வரதமாநதி அணைக்கட்டு.

*வினா எண். 493—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பழனி பகுதியில் உள்ள வரதமாநதி அணை மிகவும் குறுகிய அளவில் இருப்பதால் அங்கு மழை காலத்தில் வரும் தண்ணீர் முழுவதும் தேக்கிவைக்க முடியவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அந்த அணையிலிருந்து இரண்டு கி. மீ. மேலே தள்ளி இன்னும் ஒரு தேக்கம் கட்டும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) வரதமாநதி அணைக்கட்டின்கீழ் உள்ள குளங்கள் அனைத்தும் நிரம்பிய பிறகே அணையில் நீர்த்தேக்கப்படுவதால், இந்த அணையின் கொள்ளளவு போதுமானதாகவே உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கட்டப்பட்டுள்ள அணையில், கீழே இருக்கக்கூடிய எல்லா கண்மாய்களிலும் போதுமான தண்ணீர் இருக்கின்றது. அதைப்பற்றிச் சொல்லவில்லை. அங்கே வரக்கூடிய வரத்து ஒரு சில மணி நேரங்களிலேயே அந்த அணை நிரம்பி விடுகின்றது. ஆகவே, மற்ற நேரங்களில் தண்ணீர் கீழே அனாவசியமாகப் போகிறது. ஆகவே, இந்த அணையிலிருந்து மேலே ஒரு கிலோ மீட்டர் அல்லது இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் ஒரு பெரிய அணையைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை அந்தப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக தேனியில் நடைபெற்ற நீர்ப்பாசனக் கருத்தரங்கில் வலியுறுத்தப் பட்டது. எனவே, இந்த அணையைப்பற்றிப் பரிசீலித்து, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வரதமாநதித் திட்டம் பழனி தாலுகாவில் இருக்கிறது. வரதமா நதி கீழே 4 குளங்களும், அணைக்கட்டுகளும் இருக்கின்றன. அவைகளிலே எல்லாம் நிரம்பிய பின்னர்தான், மேலே உள்ள நீர்த் தேக்கத்திலே தண்ணீர் தேக்கி வைக்கப்படுகின்றது. இப்போது வருகின்ற வரத்து, கீழே இருக்கக்கூடிய அணைக்கட்டுகளும், குளங்களும் நிரம்பிய பின்னர், அங்கே நீர் தேக்கி வைப்பதற்குப் போதுமான அணைக்கட்டு இருக்கின்ற காரணத்தினால், மேலும் இப்படிப்பட்ட ஒரு அணைக்கட்டை மேல் பகுதியிலே கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. இப்போது கிடைக்கின்ற ஆயக்கட்டு மொத்தத்திலே 5,202 ஏக்கர் 45 சென்ட். இது போதுமான அளவாக இருக்கிறது.

Water overflowing from Sathanur Dam

* Q No. 494— Thiru C. MANICKAM

Thiru G. RAGOTHAMAN: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to State.

(a) the steps taken to utilise the water overflowing from the Sathanur Dam; and

(b) Whether proposals are under consideration to put canals to divert the over-flowing waters for irrigation?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சாத்தனூர் அணையில் மிகுதியாக உள்ள நீரைப் பயன்படுத்துவதற்காக சாத்தனூர் வலதுபுற கால்வாய் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அரசால் ரூ. 202 லட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட இத்திட்டத்தின்படி சுமார் 4,896·45 ஹெக்டேர் பரப்பு நிலம் (12,090 ஏக்கர்) நன்செய் சாகுபடியின்கீழ் கொண்டு வரப்படும். இத்திட்டம் இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) சாத்தனூர் வலதுபுறக் கால்வாயின் ஒரு கிளைக் கால்வாயை இராமராஜபுரம் அணைக்கட்டிலிருந்து, ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்லும் இராமராஜபுரம் கால்வாயுடன் இணைத்து அதன் மூலம் சாத்தனூர் அணையில் மிகுதியாகவுள்ள நீரைத் திருப்பி விட ஒரு திட்டம் அரசுக்கு வந்துள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ஒரு லட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.